Kaveri Kala Manram

# Vanni Hope

Anual Report - 2013




***Sponsord***

***By***

*F*riends Of Australia

and

World Wide

# Kaveri Kala Manram

# Vanni Hope

# Annual Report – 2013

**S p o n s o r d**

**B y**

**Friends of Australia**

**&**

**World Wide**

# From Vanni



**In** the post war period, the education and information technology development are the most needed aspects in the progress of life of the Tamil speaking people. The education plays a very important role in rebuilding of the society crippled by the three decades of war.

As regards Vanni main land is concerned almost all the families have lost everything. It is an important task to develop the families, who have lost their dear ones and left astray.

Kaveri Kala Manram is cultural organization and works towards conserving the the language, cultural traditions, art forms which signify our identity. For the last four years it has been working with them tirelessly to rebuild the life of war affected people in Vanni. It has been working with the conviction that only by building the livelihood of the families we can secure the existence of the community.

**Friends of Australia**

Mr. Ranjan, Mr. Kanthakumar and several others paid a visit to Vanni on 4th January 2013 and discussed with the people of the area and identified their needs. Based on their findings following programmes are being implemented.

***Rev.T.S.Joshua***
***Draiter of KKM***

**Greeting from Miss Ranjitha Ranjan Sivaganasundram on behalf friends of Vanni Hope Project**



At the start of this year I was given the opportunity to visit Vanni and its surrounding areas. For me this was the beginning of something new and exciting. Looking at the devastation of the war and the happiness of the people you become conflicted. You question your values and morals and your ideals of happiness. We explored numerous sites and business including a sweet shop and a mixture shop and a couple spice shops. Travelling to different families and seeing different individuals. No matter how tough life got they still managed to power through and never gave up hope. That in turn gave me hope. I can now help families struggling that haven't given up hope but are able to grow. That is why I'm thankful for this opportunity. It has enlightened me, created a new image of my mother country. Mostly it has created an experience I will never forget.

**Miss.R.Ranjitha**

# 1. *Vocational Training*

## *1.1 Computer training Centre*

***செல்வி.சுப்பையா கிருபாளினி***

***செல்வாநகர் - கிளிநொச்சி***



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள செல்வாநகர் கிராமத்தில் திரு.சுப்பையா சீதையம்மா தம்பதிகளுக்கு கடைசி மகளாகப்பிறந்தேன். கடந்த யுத்தத்தினால் எனது குடும்பமும் பாதிக்கப்பட்டது. பல இடங்கள் சென்று குடியமர்ந்து எனது சொத்துக்களை இழந்து தற்போது மீண்டும் எமது கிராமத்தில் வந்து குடியமர்ந்துள்ளோம். இக்காலப்பகுதியில் எனது கல்வி செயற்பாடுகள் மிகவும் பாதிக்கப்பட்டது. மீளவும் எமது கிராமத்தில் இருந்து வாழ்கையை ஆரம்பித்தோம்.

நான் உயர்தரம் வரையும் கல்வி கற்று பின்னர் வீட்டில் தொழில் எதுவும் இல்லாமல் மேற்படிப்பிற்கு பெறுபேறு போதாமையால், இந்த நவின உலகத்தில் எப்படி கல்வி கற்றிருந்தாலும் கணணி அறிவு இல்லாமல் எந்த ஒரு தொழிலும் செய்ய முடியாது என்பதை நான் நன்கறிவேன். இக்காலப்பகுதியில் தான் எமது கிராமத்தில் காவேரி கலாமன்றத்தினர் கஸ்ரப்பட்ட பிள்ளைகளுக்கு இலவசமாக கணனி கல்வி கற்பித்தார்கள். நான் ஏற்கனவே பாடசாலையில் ஓரளவு அறிந்திருந்தேன். இவ் கணனி நிலயத்தில் நான் சேர்ந்து கல்வி கற்றுக்கொண்டே இங்கே உள்ள பிள்ளைகளுக்கு கணனி கற்றுக்கொடுத்தேன். இதனால் எனக்குள் கணனி அறிவு மேலும் வளர்த்துக் கொன்டேன்.

இச் பயிற்சிகாலம் ஆறுமாதமாக இருந்தது இங்கே யாழ்பாணத்தில் இருந்து வருகைதந்து ஆசிரியர் மார் எமக்கு பயிற்றுவித்தனர். என்பது குறிப்பிடத்தக்கது. MS Office பாடநெறி மற்றும்,Photo Shop பாட நெறி, Print & Scan, தமிழ் ரைப்பிங் போன்ற செயற்பாடுகள் எமக்கு கற்றுதரப்பட்டது. இப்பயிற்சிகாலம் முடிவடைந்ததும் எமக்கு சான்றிதழ் தரப்பட்டது. உம்மையிலே எமது கிராமம் மிகவும் பின்தங்கயதாகும் முதல் முறையாக கணனி பயிற்சி நிலையம் போடப்பட்டதால் எமது கிராமத்தில் உள்ள அனேகமானவர்கள் இதன் மூலம் பலன் பெற்றனர் என்பதில் மிகையாகாது. இச்செயற்பாட்டை செய்த காவேரி கலாமனற்த்திற்கும் அவுஸ்ரேலியா நன்பர்களுக்கும். எனது மனமார்ந்த நன்றிகள்.

இந்தவகையில் எனது எதிர்காலம் கணனித் துறைசார்ந்ததாக இருக்க வேண்டும் என நினைத்தேன். இதனால் விடா முயற்சியுடன் கற்றேன். அதன் மூலம் வெற்றி கண்டேன். குறிப்பாக காவேரி கலாமன்ற கணனிபயிற்சி நிலையத்தில் கற்றுக்கொண்டதன் ஊடாக தற்போது நான் ASIAN Computer College பணியாற்றி வருகின்றேன். இங்கே தற்போது கணனி அலுவலகத்திற்கு பொறுப்பாகவும் பிள்ளைகழுக்கு கற்பித்து கொடுத்து வருகின்றேன். குறிப்பாக எனது எதிர்கால கனவு கணனி பற்றிய துறையில் ஒரு சிறந்த அலுவளராக வேண்டும் என்பதே. நான் இவ்வளவு தூரம் உயர்வதற்கு காரணமாக இருந்த காவேரி கலமன்றத்திற்கும் அவுஸ்ரேலிய நன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் கணனி தொடர்பான மேலதிக கல்வியை தொடர விரும்புகின்றேன் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

*நன்றி*

**திருமதி.நாகசுபேஸ் விஜகுமாரி**
**செல்வாநகர், கிளிநொச்சி.**



நாகசுபேஸ் விஜகுமாரி ஆகிய நான் கிளிநொச்சியில் உள்ள செல்வாநகர் கிராமத்தில் வசித்து வருகின்ற ஒரு சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர். எனது கணவர் ஒரு கூலித் தொழில் செய்பவர் கடந்த கால நாட்டின் அசாதாரன சூழ் நிலை காரணமாக இருப்பிடத்தை விட்டு வெளியேறி இடைத்தங்கள் முகாம்களில் வசித்து பின்னர் நாட்டின் சமூகமான நிலை தோன்றியதனால் மீளவும் எமது கிராமத்தில் மீள குடியேனோம். எனது கணவர் செய்கின்ற கூலித் தொழிலைக் கொண்டு எமது குடும்பத்தின் தேவைகளை ஈடு செய்து கொள்ள முடியாத இக்கட்டான நிலையில் இருந்தோம்.

அவ்வாறான சூழ்நிலையில் எமது கிராமத்தில் காவேரி கலாமன்றத்தால் கணனி பயிற்சி ஆரம்பித்தனர். அந்தசந்தர்ப்பத்தில் எனக்கு பல நாளாக விருப்பம் இந்தது. எமது கிராமத்தில் இலவசமாக நடாத்தியதனால். என்னால் கணனி தொடர்பான அறிவுகள் குறிப்பாக ஒரு அலுவலகத்தில் கணனியுடன் தொடர்பான தொழில் புரியக்கூடிய வகையில் அவற்றை கற்றுக்கொண்டேன். இவ் கணனி பயிற்சி நடைபெற்ற காலத்திலும் அடுத்த தையல் பயிற்சியும் ஆராம்பித்தனர். இத்தையல் பயிற்சியை நானும் கற்றுக்கொண்டேன். குறிபப்பாக எமக்கு சிறு துணிகள் வாங்கித்தந்து தையலை ஆரம்பித்தனர் அப்போது சிறு சிறு தையல் பளகி வந்தேன் பின்னர். அனைத்து விதமான தையல்களும் மற்றும் ஆடை வடிவமைப்பு செய்தல் (கட்டிங்) போன்றவைகளையும் இதன் ஊடாக கற்றுக்கொண்டேன்.

நான் கணனி பழகிக் கொண்டதால் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைப்பில் சமூகவள வாளராக ஒரு சிறிய சம்பளத்துடன் தொழில் கிடைத்தது பெரிய மகிழ்ச்சி எனது காவேரி கலாமன்றத்திற்கும் அவுஸ்ரேலியா நன்பர்களுக்கும் நான் நன்றி கூறுவதோடு, தற்போது தொழில் புரிந்து வருகின்றேன். அது மட்டு அல்ல நான் தையல் பழகியதனால் தற்போது வேலைக்கு சென்று மிகுதி நேரங்களில் எமது கிராமத்தில் வரும் தையல் ஓடர்களை செய்து வருகின்றேன்.

எனது வாழ்க்கையில் இக்கலா மன்றத்தினரும் அவுலுஸ்ரேலியா நண்பர்களின் உதவியினால் தற்போது நல்ல தொழில் வாய்ப்பை பெற்றதோடு மட்டுமல்லாமல் வீட்டில் தையல் தொழில் செய்து வருகின்றேன். நான் தற்போது வறுமைக் கோட்டில் இல்லாமல் நாளாந்த தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளையும் மற்றும் எனது பிள்ளைகளின் கல்வி தேவைகளையும் என்னால் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் நானும் எனது குடும்பமும் வாழ்ந்து வருகின்றோம். இப்படியான ஒரு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தி தந்த காவேரி கலாமன்றத்திற்கும் அவுஸ்ரேலியா நன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கின்றேன் மேலும் நான் தற்போது உள்ள நிலையில் இருந்து மேலும் என்னுடைய தொழில் வளத்தாலும் மற்றும் அறிவாலும் எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ள முடியும். என்ற மன உறுதியுடன் அனைத்துள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.... நன்றிகள்....

*நன்றி*

***செல்வி.சடாசிவம் தர்சிகா***
***வண்ணான்கேனி பளை***



கிளிநொச்சி மாவட்டத்திலே பளை என்னும் பிரதேசத்தில், வண்ணாங்கேணி எனும் அழகிய கிராமத்தில் சடாசிவம் தர்சிகா ஆகிய நான் வசித்து வருகின்றேன். 1992.07.09 ல் இம் மண்ணிலே கால் பதித்தேன் எனது இளம் பராயம் நகா்ந்து சென்றது. எனது ஆரம்ப கல்வியை கிளி/பளை மத்திய கல்லூரியில் பயின்று வந்தேன்.

இவ்வாறு நகா்வுகளின் பின் 2006 ம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது குடும்பமே இடம் பெயர்ந்து விசுவமடு எனும் கிராமத்தில் வசித்து வந்தோம். எமது குடும்பம் ஏழு அங்கத்தவா்களை கொண்ட அழகான றோஜா கூட்டம் போன்றது. ஆசைக்கு இரு அண்ணன் மாா்கள், ஒரு தம்பியும் ஒரு தங்கையுமாக எங்களில் நான்கு சகோதரர்கள். இவ்வாறு நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக நாங்கள் ஐந்து பேரும் வளா்ந்து வந்த காலத்தில் யுத்தம் என்ற போா்வையில் சிக்குண்டு பல இன்னல்களுக்கு உள்ளாகியதால் எனது அருமை அண்ணனை இழக்க நேரிட்டது. அண்ணனை இழந்த சோகம் மட்டுமல்லாது அன்றாட வாழ்விற்கு கூட இடமில்லாமல் ஓட்டமும் நடையுமாக எமது வாழ்வு நிலையில்லாது, எப்போது என்ன நடக்குமோ! என்று தெரியாது அடியற்ற மரம் போல காணப்பட்டது.

பின்னர் 21.04.2009 அன்று வவுனியா நலன்புரி நிலையத்திற்கு வந்துசேர்ந்தோம். அங்கு சிறிது காலம் இருந்து மீள்குடியேற்றம் எனும் நகர்வில் 2010.03.25 மீண்டும் சொந்த இடத்திற்கு வந்து சேரந்தோம். மேலும் அத்திய அவசிய தேவைகளை பூர்த்தி செய்த நிலையில் எனது உயர்தர கல்வியை பயின்று மூன்று பாடங்களிலும் சித்தியடைந்துள்ளேன். மேலும் கல்வி பயில வேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்த போது குடும்ப சூழ்நிலை காரணமாக கல்வியை தொடர முடியவில்லை.

இவ்வாறு இருந்த வேளையில் எமது கிராமத்தை மேலும் முன்னேற்று வதற்காக காவேரி கலாமன்றத்தினரின் அனுசரணை கிடைக்க பெற்றது. இதனூடாக கணனி கற்கை நெறியினை ஆறுமாத கால வரையறைக்குள் எம்மால் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனவே இதனூடாக மாணவா்களின் தனித்துவமான திறமைகள் வெளிக்கொணரப்பட்டன. இவா்களுக்கு நன்றி தெரிவித்து கொள்வதுடன் கலாமன்றத்தின் பணி இங்கு மட்டு மல்லாது எங்கு சென்றாலும் சீரும் சிறப்புமாக இதன் பணி தொடர வேண்டும் என்பது எனது மனப்பூா்வ ஆா்வமாக உள்ளது.

எனவே! மாணவா்கள் சாா்பாக காவேரி கலாமன்றத்திற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேன்.

*நன்றி*

*Selvanakar& Palai Computer Center*

















*1.2 Sewing Training*

***திருமதி.இந்திரக்குமாரன் இந்துமதி.***

***செல்வாநகர் கிளிநொச்சி***



நான் கிளிநொச்சி செல்வநகர் கிராமத்தில் வசித்து வருகின்றேன். எனது குடும்பம் நான்கு அங்கத்தவர்களைக் கொண்டது. கடந்த யுத்தத்தினால் எனது உறவுகளை இழந்து, சொத்துக்கள் அனைத்தையும் இழந்தேன். இனிவாழ்க்கையில் எப்படி முன்நேறுவதென்ற கேள்விக்குறியோடு வாழ்ந்து வந்தேன். அக்காலகட்டத்தில் தான் காவேரி கலாமன்றம் எமது கிராமத்தில் கணனிப்பயிற்சி நிலையம் ஆரம்பித்தது. சில நாற்களின் பின்னர் என்னைபோன்ற பெண்களை இணைத்து தையல் பயிற்சி ஒன்றை தொடங்கியது. அப் பயிற்சியில் நான் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தையல் முறைகள் கட்டிங் முறைகளை சரியான முறையில் கற்றுக்கொன்டேன்.

இப்பயிற்சி காலம் ஆறு மாதமாக நடாத்தப்பட்டது. இக்காலத்தில் நான் தையல் தொடர்பான அறிவும் கேக் ஐஸ்சிங் மற்றும் மேக்கப் போடுதல் தொடர்பான ஆரம்ப அறிவையும் பெற்றுக்கொண்டேன். இப்பயிற்சி முடிவடைந்த பின்னர் சான்றிதழ் வளங்கப்பட்டது. அத்துடன் எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் எனக்கு தையல் இயந்திரம் ஒன்று இலவசமாக தரப்பட்டது. இத்தையல் இயத்திரத்தை வைத்துக்கொண்டு நான் தற்போது எமது கிராம்தில் வருகின்ற ஓடர்கள் (உடுப்புகள்) தைத்துவருகின்றேன். இதனால் எனது நாளாந்த வருமானத்தையும் குறிப்பாக பிள்ளைகளின் கல்வி செலவையும் என்னால் ஈடு கொள்ள கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவி செய்த காவேரி கலாமன்றத்தின் ஊடாக அவுஸ்ரேலியா நன்பர்களுக்கு எனது மனமார்ந்த நன்றகள். குறிப்பாக அவர்கள் பணி மென் மேலும் தொடர இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

*நன்றி*

***திருமதி.துர்க்கலிங்கம் டெனிலா***

***ஆனைவிழுந்தான் - கிளிநொச்சி***



எமது கிராமமானது மிகவும் பின்தங்கிய கிராமமாகும். இக்கராமத்தில் வறுமைக்கேட்டின் கீழ் வாழ்பவர்கள் அதிகம் அந்தவகையில். காவேரிக்கலாமன்றத்தினர் எமது கிராமத்திற்கு வந்து எமது நிலையை அறிந்து எமது வேணடுகோளுக்கு இனங்க அவுஸ்ரேலியா நன்பர்களின் நிதியுதவியில் ஒரு தையல் பயிற்சி நிலையத்தினை தொடங்கி வைத்தனர். இதில் நானும் தையல் பழகி வருகின்றேன்.

குறிப்பாக எனது கணவர் கூலி தொழில் செய்பவர் ஆவார் இதனால் அந்த வருமானம் எமது வாழ்க்கை செலவிறிகு போததுள்ளது இத்தையல் பயிற்சியை முடித்து நானும் வீட்டில் இருந்தவாறே தொழிலில் ஈடுபட முடியும். இதனால் எனது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள முடியும்.

தையல் பயிற்சி நிலையமானது 2013.08.04 தொடக்கப்பட்டது. இப்பயிற்சி நிலையத்தில் நாங்கள் ஆரம்பத் துண்டுதையல், ஆரம்ப குழந்தைசட்டை தையல், 1 – 8 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்கான சிறிய சட்டைகள், குழந்தை நிக்கர், கால் நிக்கர், தலைகாணி உறை, சட்டை, சேட், நாட்சட்டை போன்ற தையல்களை பழகியுள்ளோம். மேலும் முழுச்சட்டை, சாறிச்சட்டை, முழுப்பாவடை, சிறிய நீளக்காட்சட்டை, பஞ்சாவி, கேக் ஐசிங், பேசியல் போன்றவைகள் பழக விரும்புகின்றோம். ஊங்களால் முடிந்தால் எமக்கு இன்னும் இரண்டு மாதங்கள் இப்பயிற்சியினை வழங்கவேண்டும் என்று பயனாளிகள் சார்பாக கேட்கின்றேன்.

மேலும் இப்பயிற்சிகாலம் முடிவடைந்த பின்னர் எமக்கு தையல் இயந்திரங்களை தருவீர்கள் ஆனால் தையல் பழகியதில் அர்த்தமும் குறிப்பாக பயனுள்ளதாகவும் இருக்கும். ஏனெனில் பழகிய பின்னர் இயந்திரம் இல்லாவிட்டால் வீட்டில் இருக்கும்போது தைக்கமுடியாது, இயந்திரம் இருக்கும்பட்சத்தில் அயலில் உள்ளவர்கள் மற்றும் தெரிந்தவர்கள் உடுப்பினை தைத்து கொடுத்து எமது வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருக்கும். மேலும் எமக்கு கிடைத்த இந்த உதவிக்காக காவேரி கலாமன்றத்திற்கும் அவுஸ்ரேலியா நன்பர்களுக்கும் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். இவர்கள் பணி மேலும் எமது கிராமத்திற்கு தேவை என்பதை நினைவு படுத்திக்கொள்கிள்றேன்.

*நன்றி*

***Selvanakar &Anaivilunthan***















## 2. *Livelihood programme*

*2.1 Establish grocery shop*

*2.2 Goat rearing*

***திருமதி.கிஸ்ணகுமார் புவனேஸ்வரி***
***மலையாளபுரம் - கிளிநொச்சி***



எனது பெயர் திருமதி.கிஸணகுமார் புவனேஸ்வரி நான் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரச்சி பிரதேசத்தில் உள்ள மலையாளபுர கிராமத்தில் வசித்து வருகின்றேன். எனது குடும்பமானது. ஐந்து பேரைக்கொண்ட ஒரு அழகிய குடும்பமாகும். யுத்தத்திற்கு முன்னர் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்தோம். யுத்த காலப்பகுதியில் எனது கணவர் மாரடைப்பால் இறந்து விட்டார். பின்னர் எனது மூன்று பிள்ளைகளையும் படிப்பிப்பதற்காகவும் வாழ்வதற்காகவும் நான் கூலி தொழில் செய்ய தொடங்கினேன். இவ் யுத்தத்தினால் நான் காயப்பட்டேன் அது போன்று எனது மூத்த மகள் உடம்பு எல்லாம் பீஸ் இருக்கின்றது. இதனால் என் மகள் நாளுக்கு நாள் வேதனைப்பட்டு வருகின்றார். அவ் பீஸ் எடுக்கும் பட்சத்தில் அவருடைய கால் கை வழங்காத நிலை ஏற்படலம் என வைத்தியர்கள் கூறியுள்ளார்கள். இவ் சோகம் நிறைந்த வாழ்கையில் நானும் எனது பிள்ளைகளும் வாழ்ந்து வகின்றோம்.

இக்காலப்பகுதியில் சிறு குடிசை அமைத்து வசித்து வந்தோம். மலசல கூட வசதி இன்றி மிகவும் கஸ்ரப்பட்டோம். இக்கலப்பகுதியில் காவேரி கலாமன்ற இயக்குனர் வண.வு.ளு.யோசுவா அடிகளாரின் உதவியால் எமக்கு மலசலகூம் அமைத்து தந்தார். இதற்கு அவருக்கு நன்றிகள் சொல்ல கடமைப்பட்டுள்ளேன். எனது இரண்டாவது மகள் சாமந்திகாவின் கல்வி செலவுகுக்கு பண உதவி செய்து வருகின்றார். அது மட்டுமல்ல பாடசாலை செல்வதற்து துவிச்சக்கர வண்டி தரப்பட்டுள்ளது. இதனால் எனது மகள் மனதில் சந்தோசத்துடன் தனது படிப்பை தொடர்ந்து கொண்டுள்ளார். அத்துடன் எனது வாழ்வாதாரமாக குடிசைக்கைத்தொழில் அதாவது ஆடு வளர்ப்பு ஆடு வாங்கிதந்தார்கள். குறிப்பாக ஆடும் அவற்றை பராமரிக்க கொட்டில் அமைத்து தந்தனர். அதற்கு காவேரி கலாமன்றத்திற்கும் ஆவுஸ்ரேலியா நன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இத் தொழில் பயற்சியை கொண்டு என்னால் எனது குடும்பத்தை ஓரளவுக்கு கொண்டு செல்ல முடியும் என்பதில் ஐயமில்லை. இதற்காக மீண்டும் காவேரி கலாமன்றத்திலற்கும், அவுஸ்ரேலியா நன்பர்களுக்கும் எனது குடும்பம் சார்பாக நன்றிகள் அவர்கள் பணி மேலும் தொடர வேண்டும். இதற்காக நான் கடவிளிடம் வேண்டுகின்றேன்.

*நன்றி*

*Establish grocery shop & Goat rearing*















# 1. *Parentless children programe*

## *1.1 Education*

***திருமதி.பாலச்சந்திரன் சியானி***
***ஆனைவிழுந்தான்***



பாலச்சந்திரன் சியானி ஆகிய நான் ஆனைவிழுந்தான் எனும் கிராமத்தில் வசித்து வருகின்றேன். எனது குடும்பத்தில் நானும் எனது பிள்ளையும் எனதுதாயாரும் எனது கணவரும் எனது தந்தையும் வாழ்ந்து வந்தோம். நாங்கள் யுத்தத்திற்கு முன்னதான காலப்பகுதியில் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்தோம். இவ்வாறாக வாழ்ந்து வந்து கொண்டிருந்த காலப்பகுதியில் தான் எமது கிராமத்தில் யுத்தம் ஏற்பட்டது. இதன் காரணத்தினால் எமது கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்து விசுவமடு சென்றோம். அங்கு குடிசை அமைத்து மூன்று மாதம் அளவில் வாழ்க்கை நடத்தி வந்தோம். அங்கும் செல்தாக்குதல் தொடர்ந்து வர அங்கிருந்து சுகந்திரபுரத்திற்குச் சென்றோம். அங்குகிருந்த காலப்பகுதியில் எனக்கொரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்து மூன்று நாட்களில் அங்கும் இருக்கமுடியாமல் அத்திய அவசியமான பொருட்களை மட்டும் எடுத்துக்கொண்டு கால்நடையாக இரனைப்பாலை எனும் இடத்தில் குடி அமர்ந்தோம்.

குறிப்பாக இரனைப்பாலைப்பகுதியில் ஒரு கிழமை அலவில் இருந்தோம், அதன்பின் அங்கிருந்து கால்நடையாக மாத்தலன் தொங்கள்வரை சென்றோம், அங்கு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் வேலையில் செல்வீச்சு அதிகமானது வேறு இடங்களுக்கும் செல்ல முடியாது அங்கிருந்து இரானுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் 209.04.05ம் திகதி சென்றோம் எனக்கு மூன்று ஆண் சகோதரர்கள் இருந்தார்கள் இரண்டுபேர் விடுதலை புலிகள் இயக்கத்தில் இருந்தார்கள் அவர்களை பற்றிய தகவள்கள் ஒன்றும் கிடைக்க வில்லை. எனது தமையனாருடன் தாய் தந்தையை ஒப்படைத்து விட்டு வந்தோம். வரும் வழியில் என்னுடைய கணவர் தவரவிடப்பட்டுவிட்டார். நானும் என்னுடைய 1மாத பிள்ளையும் வவுன்யாவில் உள்ள ஒரு முகாமில் வந்து குடியமர்ந்தோம். எனக்கு சரியான வருமையாக இருந்தது உதவிக்கு யாரும் இல்லை இவ்வாரு இருந்த கால கட்டத்தில் எனது தாயும் தந்தையும் வந்து விட்டார்கள். அவர்கள் வந்த பிறகுதான் தெரியும் என்னுடைய அண்ணா செல்தாக்குதலினால் இறந்து விட்டார். என்று முகாமில் வந்து இருக்கின்ற பொழுது எனது தந்தை மூன்று ஆண் பிள்ளைகளும் பிரிந்த கவலையில் இறந்து விட்டார். நானும் எனது பிள்ளையும் அம்மாவும் வாழ்ந்து வந்தோம்.

வறுமை எம்மை வாட்டியது இதன் காரணத்தினால் தோசை சுட்டு விற்று வாழ்க்கை நடத்தி வந்தோம். இவ்வாறான காலப்பகுதியில் எனக்கு மார்பில் கட்டி ஏற்பட்டது சத்திர சிகிச்சை செய்துள்ளேன். இதன் காரணமாக வேலை செய்ய இயலாது வைத்திய சாலை, வீடு என ஏறி இறங்கினேன். எனக்கு சத்திர சிகிச்சை செய்த காரணத்தினால் பாரிய வேலை எதுவும் செய்ய முடியாது நாம் எமது கிராமத்திற்கு மீள் குடியேற்றப்பட்டோம். இங்கு வந்து குடிசை அமைத்து வாழ்ந்து கொண்டுருக்கும்போது வறுமை வாட்டியது. என்ன செய்வதென்றே தெரியாதிருந்தது அப்பொழுது எனக்கொரு வேலை கிடைத்தது அதில் வருகின்ற வருமானம் எனக்கு போதுமானதாக இல்லை இவ்வாரான இக்கட்டான சூழ்நிலையில் தான் காவேரி கலா மன்றத்தினர் என்னுடைய பிள்ளையை படிப்பதற்கு உதவி செய்தற்கு முன்வந்தார்கள். எனது பிள்ளையின் கல்விக்றான செலவு மற்றும் பல உதவிகளை காவேரி கலாமன்றம் செய்து வருகின்றது.

மேலும் எனது கிராமத்தில் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் எம்மை குழுக்களாக்கி சட்டரீதியாக பதிவு எமக்கு என கணக்கு திறக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு இரு தடவைகள் சேமிப்பு கூட்டம் நாங்களாகவே நடத்தி அதில் வரும் பணத்தை வங்கியில் போடு வருகின்றோம். இவ்வாறான சந்தர்ப்பதில் தான் எனக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக குழு ஊடாக பெருட்தோட்டப்பயிரான கோப்பிக்கண்டு தந்தனர். இது எமது குடும்பத்தினருக்கு எனது பிள்ளையின் எதிர்காலத்திலும் பெரிய உதவியாக இருக்கும் என்பதை மறுக்கமுடியாது. குறிப்பாக இவ் உதவித்திட்டத்தினை காவேரி கலாமன்றத்தின் ஊடாக அவுஸ்ரேலிய நன்பர்கள் உதவிசெய்துள்ளனர். அவர்களுக்கு எனது குடும்பம் சார்பாக நன்றிகள். அவர்கள் பணி மேலும் வளர வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

*நன்றி*

***திருமதி.செல்லதுரை கமலா***
***ஆனைவிழுந்தான்***



செல்லத்துரை கமலாவாகிய நான் ஆனைவிழுந்தான் கிராமத்தில் வசித்து வருகின்றேன். என்னுடைய குடும்பத்தில் தற்பொழுது நானும் என்னுடைய நான்கு பிள்ளைகளும் வசித்து வருகின்றோம். இன்பமும் துன்பமும் கலந்ததுதான் மனித வாழ்க்கை அவ்வாரே என்னுடைய வாழ்க்கையும் காணப்படுகிறது. யுத்தத்திற்கு முன்னதான காலப்பகுதியில் எமது குடும்பத்தில் நானும் எனது கணவரும் நான்கு பிள்ளைகளும் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தோம். என்னுடைய கனவர் இருந்த காலத்தில் பிள்ளைகளின் கல்வித்தேவைகளையும், அத்தியவசிய தேவைகளையும் இலகுவாக நிறைவேற்றி எம்முடைய கிராமத்தில் நடுத்தர குடும்பத்தினராய் வாழ்ந்து வந்தோம்.

இவ்வாறு வாழ்ந்து வந்து கொண்டிருந்த காலப்பகுதியில்தான் யுத்தம் ஏற்பட்டது அமைதியாக இருந்த எமது கிராம முதன் முதலாக 2008.08.18ம் திகதி செல்தாக்குதலுக்கு உற்பட்டது. இதன் காரணத்தினால் 2008.08.21ம் திகதி எமது கிராமத்தை விட்டுச் சென்று செல்வாநகரில் ஒரு மாதம் அளவில் குடிசை அமைத்து வாழ்ந்து வந்தோம் பின்னர் அங்கு செல்தாக்குதல் ஏற்பட்டவுடன் வட்டக்கச்சி எனும் ஊருக்கு சென்றோம். அங்கு காணப்பட்ட பாடசாலையில் எனது பிள்ளைகளை கல்விகற்று வந்தனர். அங்கும் ஒரு மாத காலம்வரை வாழ்ந்து கொண்டிருக்கும் போது அங்கும் செல்லடித்தது இவ்வாராக அங்குருந்து இடம்பெயர்ந்து விசுவமடு சென்றோம். அங்கும் எங்களை செல்விடவில்லை எனது பிள்ளைகளின் கல்வியை தொடரமுடியாத நிலையில் அத்திய அவசியமான பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு அங்குருந்து கால்நடையாக புறப்பட்டு சுகந்திரபுரத்திற்கு வந்தோம்.

சுகந்திரபுரப்பகுதியில் இருந்து எமது உயிருக்கு நாமே உத்திரவாதம் சொல்ல முடியாதவராய் ஒவ்வொரு இடத்திலும் ஓர்நாள் இரண்டுநாள் என கால் நடையாகவே வட்டுவால் தொங்கள் மட்டும் வந்து சேர்ந்தோம் எங்களிடம் உள்ள பொருள் பண்டங்கள் எல்லாம் முடிந்து விட்டது என்னுடைய கனவறுக்கும் வேலையில்லை. உணவு பொருட்களுக்கோ தட்டுப்பாடு மக்கள் பட்டினியாலும் செல்வீச்சினாலும் நாளுக்கு நாள் இறந்து கொண்டே இருக்கின்றனர் இவ்வாரன காலகட்டத்தில்தான் நாம் இரானுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் செல்வதற்கு தயாரானோம் 2009.04.05ம் திகதி 12.00மணி அளவில் விடுதலைபுலிகலின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து இரானுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் சென்றோம். செல்லும் போது எந்த வித பொருட்களையும் கொண்டு செல்லவில்லை உடுத்தி இருந்த உடைமட்டும்தான் மாற்றுவதற்கு கூட உடை எம்மிடம் இல்லை என்னுடைய கனவரின் தாய்க்கு காது கேட்காது தந்தைக்கு கண்தெரியாது அவர்களை கூட்டிவருவதற்காக விடுதலை புலியினரின் கட்டுப்பாட்டுக்குள் நின்று விட்டார் எம்மை இரானுவத்தினர் கூட்டிசென்று வவுனியாவில் உள்ள முகாமில் ஒரு வீடுதந்து குடிஅமர்த்தினார் எம்மிடமோ ஒரு ரூபாய் பணமும் இல்லை பிள்ளைகள் எல்லாம் சிறு சிறு பிள்ளைகள் அவர்கள் ஆசைப்பட்டு கேட்கும் பொருட்களை வேண்டிக் கொடுப்பதற்கு என்னால் முடியவில்லை. எனக்கோ மிகவும் வேதனையாக இருந்தேன். இக்காலத்தில் வறுமை எம்மை வாட்டியது.

இவ்வாறு வாழ்ந்து கொண்டிருந்த போது அயல் வீட்டில் கடனாக ரூபா 1000.00 வாங்கி அதை முதலீடாக கொண்டு பற்றிஸ், அப்பம் போன்ற உணவுப்பண்டங்களை தயாரித்து எனது மூத்த மகள் அவற்றை கொண்டு சென்று விற்று வருவான். அவ் உணவுப் பொருட்களை விற்றுவிட்டு பாடசாலை செல்வான்.இவ்வாறு எனது குடும்பம் ஓடிக்கொண்டிருந்தது. 2010 ஆண்டு காலப்பகுதியில் எம்மை மீழ் குடியேற்றத்திற்காக மீண்டும் எமது கிராமமாகிய ஆனைவிழுந்தான் வந்து மீழவும் எமது வாழ்க்கையை தொடர ஆரம்பித்தோம்.

எமது கிராமத்தில் நான் கூலி தொழில் செய்து எனது குடும்பத்தை நான் பார்த்து வந்தேன். அக்காலப்பகுதியில் எனது மூத்த மகன் தரம் 11 இல் கல்வி கற்றுக்கொண்டிருந்தான் அப்போது எனக்கு இருதய கோழாறு காரணமாக என்னால் தொழில் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. இதன் காரணமாக எனது மகன் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு கூலி தொழில் செய்து என்னையும் அவனது சகோதரர்களையும் பார்த்துவந்தான். இவ்வாறு இருந்தும் எனது பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்து செல்ல மிகவும் கஸ்ரப்பட்டுக்கொண்டிருந்த காலப்பகுதியில் அது.

இக் காலப்பகுதியில் காவேரி கலாமன்றத்தினர் எம்மை வந்து பார்வையிட்டு எனது கடைசி பிள்ளையின் படிப்பு செலவிற்கு உதவி செய்து வருகின்றார்கள். மேலும் எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பெரும் தோட்டபயிரான கோப்பிக்கன் தந்து அதனை நான் பயிருட்டுள்ளேன் இதன் ஊடாக என்னால் எதிர்கால்தில் எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்தில எனது குடும்பத்தை வழிநடத்த முடியும். குறிப்பாக இப் பண உதவியை செய்த ஆவஸ்ரேலியா நன்பர்களுக்கு என்சார்ப்பாகவும் எனது குடும்பம் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் அவர்களின் பணி தொடர எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்கு துனைபுரிவார் இவர்களுக்காக நான் கடவுளிடம் மன்றாடுகின்றேன்.

*நன்றி*

***செல்வி.அ.விஜிதா***
***ஆனைவிழுந்தான் - கிளிநொச்சி***



எனது அண்ணாவின் குடும்பம் நாங்களும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்தோம். ஏழிமையில் வாழ்ந்தாலும் ஒரே குடும்பமாக ஒற்றுமையுடன் வாழ்கின்றபோது அண்ணனுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள் எனது அண்ணா தனது பிள்ளைகளின் ஆசைகளை எவ்வளவு வறுமையில் இருந்தாலும் கூலி வேலைக்கு சென்று நிறைவேற்றுவார். காலத்தின் கோலத்தினால் யுத்தம் என்ற புயல் வீசத் தொடங்கியது. நாளுக்கு நாள் கண்ணீரும் அபயகுரல் ஊர்எங்கும் பரவியது ஒருத்தரை ஒருத்தர் விட்டுப்பிரியும் நேரமும் வந்ததுசேர்ந்தது கரை காண முடியாத படகைப்போல தடுமாறியது.

இவ்வாறு பல இடங்கள் சென்று நாம் வவுனியா அகதிமுகாமுக்கு சென்று விட்டோம். அண்ணா அண்ணி பிள்ளளைகளின் நிலை என்னவென்று தெரியாத நிலையில் ஏக்கத்தோடும் பயத்துடனும் மரணத்தை சந்திக்கும் நிலை நாளுக்கு நாள் சனத்தொகை பசி பட்டினியுடன் பினங்களுக்கு நடுவில் படுக்கும் நிலையில் அகதிமுகாமுக்கு வந்து சேர்ந்தார்கள். எனது அண்ணா குடும்பம் இன்று வருவார் நாளை வருவார் என்று வழிமீது விழிவைத்து பார்த்துக் கொண்டிருந்த எமக்கு பெரும் அதிர்ச்சியான செய்தி வந்தடைந்தது அண்ணா அண்ணி இருவரும் இருட்டு மடு என்னும் இடத்தில் பங்கருக்குள் இறந்து விட்டார்கள் என்று வந்தவர்கள் கூறினார்கள். அண்ணா அண்ணி முகத்தை கூட எமக்கு பார்க்க முடியாத பாவிகளாகி விட்டோம் என்ற நிலையில் எனது தாயார் இச் செய்தி கேட்டதும் படுத்த படுக்கையாக இருந்தார். என்ன செய்வது எங்கே போய் பிள்ளைகளை தேடுவது என்ற நிலையில் பிள்ளைகள் மூவரும் தாயின் சித்தியுடன் எந்தவித ஆபத்துக்களும் இன்றி வேறு முகாமில் இருக்கின்றார்கள் என்று எனது அறிந்தோம்.

அம்மாவின் நிலையை நினைத்து வேதனை அடைவதா அல்லது பிள்ளைகளின் நிலையை நினைத்து வேதனைப் படுவதா என்று இருந்தேன் அப்போது தான் உறவு இணைப்பின் மூலம் பிள்ளைகள் மூவரும் வந்து சேர்ந்தார்கள். பாவம் விதுசன் 3 வயது தொடக்கத்தில் எம்மிடம் வந்து சேர்ந்தான். தனது தாய்தந்தை இறந்த நிலை தெரியாத குழந்தையாக வந்து சேர்ந்தான். தனியொருவர் வாழ்க்கை நடத்த முடியாத நிலையில் நாம். வாழ்க்கை இழந்த அக்கா அத்துடன் மூன்று பிள்ளைகள். அம்மா பிள்ளைகளைப்பார்த்ததும் உயிர் தப்பி பிழைத்தார்.

இவர்களை நான் ஒருவர் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்றட்டது. அது மட்டுமல்ல எனது கடமை இது. நான் தையல் தொழில் புரிந்து எனது அன்றாட வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டிக் கொண்டு இருக்கின்றேன். பிள்ளைகளை நல்ல முறையில் கல்விகற்பிக்க வேண்டுமே என்ன செய்வது என்று தடுமறி கொண்டிருந்தேன். மீள்குடியேற்றத்தில் வந்து சேர்ந்தோம் அப்போது காவேரி கலாமன்றத்தினர் எமது கிராமத்தில் வந்து பணியாற்ற தொடங்கினர். இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் பிள்ளைகளின் கல்விக்கு உதவிக்கரம் நீட்டினார்கள். அவர்களில் உதவியால் பிள்ளைகளின் வளர்ச்சி முன்னெடுத்து செல்லுகின்றேன் அப்போது கல்வி சுற்றுலாவுக்கு கூட்டிச் சென்றார்கள். ஒரே குடும்பமாக வாழ்ந்து வரும் எமக்கு பல குடும்பங்களின் பலதரப்பட்டவர்களிடம் குறிப்பாக குழந்தைகளுடனும் பெற்றோருடனும் பழகும் வாய்ப்பு, தெரியாத இடங்களுக்கு அளைத்து சென்றனர் மேலும் விதுசன் நல்ல முறையில் தனது மகிழ்சியை வெளிப்படுத்தி சந்தோசமாக இருந்தார்.

குறிப்பாக எனது அண்ணாவின் மகனான விதுசன் அவர்களின் கல்வி செயற்பாட்டிற்கு உதவி செய்கின்ற காவேரி கலாமன்றத்தினருக்கம், அவுஸ்ரேலியா நன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இவர்கள் பணி மேலும் வளர வேண்டும் என நான் கடவுளிடம் வேண்டுகின்றேன்.

நன்றி

***திருமதி.மகேந்திரன் கவிதா (கயல்விழி)***
***ஆனைவிழுந்தான் - கழுழுநொச்சி***



நான் எனது இளமைக் காலத்தை எனது பெற்றோருடனும் சகோதரர்களுடனும் மிக சந்தோசமாக கழித்தேன். பின்னர் பெற்றோகளின் விருப்பத்தின் பெயரில் திரு.ஆறுமுகம் கேந்திரன் என்பவரை திருமணம் செய்து சீரும் சிறப்புடன் சந்தோசமாக வாழ்ந்து வந்தேன். எனக்கு முதலாவது பிள்ளையாக கயல்விழியை பெற்றேடுத்தேன். பின்னர் ஆணபிள்ளை ஒன்றை பெற்றேன் இவ் வார்களுடன் சேர்ந்த எனது வாழ்க்கை மிகவும் சந்தேசமாக கழித்து வந்தேன். காலத்தின் விந்தையினால் இடப்பெயர்வு வந்து எமது வாழ்வை சிதைத்து விட்டது.

இடப்பெயர்வால் நாம் இருட்டு மடு பகுதியில் இருந்தபோது பாராபட்சம் பாக்காத எறிகனைத்தக்குதலில் எனது கணவர் பலியானார். பின்னர் நானும் எனது பிள்ளைகளும் அம்மாவுடன் சேர்ந்து இருந்தோம். இவ்வாறு பல இடங்கள் இடம் பெயர்ந்து இறுதியில் இடைத்தங்கல் முகாமில் இருந்து மீண்டும் எமது சொந்த இடமான ஆனைவிழுந்தான் வந்து குடியேறினோம்.

மீழவும் புதிய வாழ்கை ஆரம்பமானது எமது கிராமத்தில் தொழில் வாய்ப்பு இன்றி எனது பிள்ளைகளையும் தாயையும் வைத்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என் கையில் வந்து சேர்ந்தது. கூலிதொழில் செய்து எனது பிள்ளைகளை வளர்த்தும் அவர்களை கல்வி கற்பித்தும் வந்தேன். இவ்வாறான ஒரு இக்கட்டான நிலையில் நான் சிக்கி தவிர்த்த வேளையில் கிளிநொச்சி காவேரி கலாமன்றத்தினர் எமது பிரதேசத்திற்கு வருகைதந்து எனது பிள்ளையின் கல்வி செலவை தாம் பொறுப்பெடுத்து வழிநடத்தி வந்தார்கள். இதனால் எனது மகளின் கல்வி செலவு பற்றி கவலை இல்லை இருந்தாலும் எனது மகளை நல்ல நிலைக் படிப்பிக்க வேண்டும் என்ற அவா என்னிடத்தில் உள்ளது.

மேலும் எனது வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் சிறுகைத்தொழிலுக்காக ஆடு வாங்கிதந்துள்ளனர் இதனால் என்னுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் மேலும் எனது இரண்டாவது பிள்ளையையும் என்னால் நல்ல நிலைக்கு கொண்டுவர முடியும். குறிப்பாக எனது மகளாக கயல்விழியின் கல்வி செலவிற்கும் எனது வாழ்வாதாரத்தை கொடுத்தமைக்கும் காவேரிக் கலாமன்னத்திற்கும் அவுஸ்ரேலியா நன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

நன்றி

***செல்வி.வி'யமனோகரன் பிந்துஜா***
***கனகபுரம் - கிளிநொச்சி***



எனது பெயர் செல்வி.வி'யமனோகரன் பிந்துஜா. நான் 09.08.2003 ஆண்டு இவ்வுலகில் பிறந்தேன். நான் கிளி.கனகபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றேன். கடந்த காலத்தில் நடைபெற்று யுத்தத்தில் எனது அப்பா இறந்து விட்டார். இப்போ நானும் எனது அம்மா தொழிலி இன்றி எம்மை வளர்க்கவும் கல்வி கற்பிக்கவும் மிகவும் சிரமப்பட்டு வருகின்றார். இந்த நிலையில் காவேரி கலாமன்றத்தினர் எம்மை வந்து பார்வையிட்டு எனது கல்வி செயற்பாட்டிற்கு உதனர் செய்தனர். இதனால் எனது கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்து செல்ல மிகவும் ஒரு உந்து சத்தியாக இருந்தது.

இவ் ஆண்டு நான் புலமைப்பரிசில் தேற்றி 153 கட்டவுட் புள்ளிகளை எடுத்து வெற்றி யடைந்தேன். இதனால் எனது அம்மாவும் சகோதரர்களும் மிகவும் சந்தோசமடைந்துள்ளனர். இச்சந்தோசத்திற்கு காவேரிக் கலாமன்றத்தினருக்கும் அவுஸ்ரேலியா நன்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். குறிப்பாக என்னை வளம்படுத்திய ஆசிரியர்களுக்கும் தனியார்கல்வி நிறுவணங்களுக்கும் இவ்வாறான கஸ்ரத்தில் மத்தியிலும் நான் புலமைப்பரிசில் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளேன்.

குறிப்பாக புலமைப்பரிசிலில் சித்தியடைந்ததால் காவேரி கலாமன்றத்தினால் பாரட்டு விழா வைத்தார்கள் அதில் என்னையும் அழைத்து வாழ்தி பரிசில் கள் வழங்கினார்கள். இது என்னை மேலும் சந்தேசப்படுத்தியயது அது மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் நான் சிறந்த ஒரு கல்வி மானகவரவேண்டும் எமது மக்களுக்கு நல்ல சேவைபுரிய வேண்டும் என்ற மனப்பாங்கு என்னிடத்தில் உள்ளது. இதற்காக நான் கடவுளிடம் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் எனது கல்வி செயற்பாட்டிக்கு உதவி செய்த காவேரி கலாமன்றத்திற்கும் அதன் நிர்வாகிகளுக்கும் மற்றும் நிதி உதவி வழங்கும் அவுஸ்ரேலியா நன்பர்களுக்கும் எனது சார்பாகவுத் எனது குடும்பம் சார்பாகவும் நன்றிகள். மேலும் என்னுடன் சேர்ந்து 6 பேருக்கு இவ்வுதவித்திட்ம் நடைபெறுகின்றது. இவர்கள் பணி வளர நான் கடவுளை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

*Education*


Hope Children Project
Tamil New Year Gatharing - 2013
Implement by
Kaver Kalamanram


13/04/2013 01:48 PM






Friends of Australia
Hope Children Project
Tamil New Year Gatharing - 2013
Implement by
13/04/2013 02:15 PM





## 2. Support for higher education

2.1 University education

***செல்வி.தர்சிகா தர்மகுலசிங்கம்***
***வள்ளிபுனம் முல்லைத்தீவு***



எனது பெயர் தர்சிக தர்மகுலசிங்கம் நான் முல்லைதிதீவு மாவட்டத்தில் வள்ளிபுனம் கிராமத்தில் வசித்து வருகின்றேன். நான் தற்போது உடையார்கட்டு மகாவித்தியலயத்தில் 2015 ஆம் ஆண்டு காபோதா உயர்தர பரிச்சைக்காக தோற்றவுள்ளேன். துரம் 12 இல் உயிரியல் பிரிவில் கல்வி கற்று வருகின்றேன். எனது இலட்சியம் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்பதாகும். ஆனால் எனது குடும்ப சூழ்நிலையில் என்னால் என் இலட்சியத்தை அடைய இக்கல்வியை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

ஏனெனில் எனது குடும்பம் மிகவும் வறுமைப்பட்டது. எனது தந்தை 2010 ஆம் ஆண்டு காணாமல் பிரிந்துவிட்டார். எனது குடும்பத்தில் மொத்தம் எட்டுபேர் எனக்கு நான்கு பெண்சகோதரர்களும் இரண்டு ஆண் சகோதரர்களும் உள்ளனர். எல்லோரும் கல்வி கற்று வருகின்றனர். எனது மூத்த சகோதரி தரம் 13டிலலும், இளைய சகோதரி தரம் 10, மற்றய சகோதரி தரம் 07, மற்றைய தங்கை தரம் 02, தம்பி தரம் 06, கடைசி தம்பி தரம் 01 இல் கல்வி கற்று வருகின்றார்கள்.

எனது அம்மாவே வறுமையின் மத்தியில் எமது கல்வியை தொடரவும் நாம் பாதுகாப்பகவும் இருக்க கூலி தொழில் செய்து காப்பாற்றி வருகின்றார். ஆனால் பெரியளவில் எமது கல்விக்காக செலவழிக்க அம்மாவால் முடியாமல் போனது. நுான் காபோத சாதாரணப் பரீட்சை 2012 ம் ஆண்டு தோற்றினேன். எனது பரீட்சை பெறுபேறு வந்தது. தமிழ் A, சயமம் A, கணிணதம் B, விஞ்ஙானம் B, வரலாறு B, ஆங்கிலம் S, குடியியல் A, விவசாயம் C இவ்வாறு எனது பெறுபேறு அமைந்தது. எனக்கு விஞ்ஞானத்துறையில் உயிரியல் பிரிவில் கல்விகற்க நிறைய பணம் செலவழிப்பதே பிரச்சினையாக இருந்தது. எனது இலட்சியத்தை அடைய வநுமை பணம் என்பன தடையாக இருந்தது. இதனால் நானும் எனது அம்மாவும் என்ன செய்வது என்பது தெரியாமல் இப்படிப்பை கைவிடும் நிலையில் இருந்தோம்.

